ரம்னிக்லால் மோஹன்லால்

கம்பெனியார் தயாரித்த

# பக்கா ரௌடி

உன்னத தமிழ்பேசும் படம்-கதையும் பாட்டும்




# PUCCA ROWDY

*Produced by :*

**Ramniklal Mohanlal & Co.,**

**BANCALORE CITY.**


The B. N. Press, Madras.

# பக்கா ரௌடி

## தமிழ் பேசும் படம்.

(இந்துகுமார் இயற்றியது)

### நடிகர்கள்.

---

| | |
|---|---|
| ராதா | —R. B. லக்ஷ்மிதேவி. |
| கமலா | —கமலாபாய். |
| கண்ணபிரான் | —P. S. சீனிவாஸராவ் B.A. |
| நடேஸ் | —சுலேமான் பாஷா. |
| பக்கா ரௌடி | —A. ரத்னசபாபதி. |
| ரங்கன் | —N. விஸ்வநாத். |
| கொக்கோ | —S. S. கொக்கோ. |
| சத்தார் | —மாதவன் பிள்ளை. |
| போலீஸ் இன்ஸ்பெக்டர் | —K. B. ராவ். |

| | |
|---|---|
| பாட்டுகளும் சம்பாஷணையும் ... | A. ரத்தினசபாபதி. |
| டைரெக்ஷன் ... ... | K. அமர்நாத். |
| ப்ரொடெக்ஷன் மானேஜர் ... | R. M. ஜோஷி. |

# ரம்ணிக்லால் மோஹன்லால்
# கம்பெனியார் தயாரித்த
# பக்கா ரௌடி

## கதைச் சுருக்கம்

எந்த வேளையிலும், எந்த நிமிஷத்திலும் "பக்கா ரௌடி" வந்து தங்களைக் கொள்ளையடிக்கக் கூடும் என்ற திகில் ஜனங்களின் மனதில் இருந்து வந்தது.

அவன் மனிதர்களை மிருகங்களை போல் கொலை செய்தான்! நகரங்கள் அவனால் கொள்ளையடிக்கப்பட்டன! கிராமங்கள் நிர்மூலமாயின! வீடுகள் நெருப்புக்கிறையாயின!

பக்கா ரௌடி என்ற பெயர் ஜனங்களுக்குச் சிம்ம சொர்ப்பனமாக இருந்து வந்தது!

ஆனால்! கொள்ளைத் தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்னால் அவன் ஒரு கௌரவமான, நேர்மையான நடத்தையுள்ள மனிதனாயிருந்தானென்பது ஒருவருக்கும் தெரியாது! ஏழை மக்களும், பிறரால் வஞ்சிக்கப்படும் பாமர மக்களும் படும் கஷ்டங்கள் அவன் மனதில் வாள்கொண்டறுப்பது போலிருந்தன! பாவம்! ஏழை ஜனங்கள் தங்கள் ஒருவேளை சாப்பாட்டிற்குக் கூடத் தங்கள் இரத்தஞ் சிந்திக் கஷ்டப்பாடு படுவதை அவன் கண்டான்! கஞ்சிக்கு வழியில்லாத கஷ்டத்தால்—தரித்திரத்தால் அந்த தரித்திர நாராயணர்கள் இலைகளையும், தழைகளையும், கல்லும் மண்ணும் கலந்து தின்ன யோக்கியதை இல்லாத பொருள்களையும் தின்று காலந் தள்ளும் கோரக்காக்ஷியை அவன் கண்கள் காணச் சகிக்கவில்லை. ஒரு சமயம் அன்பு மிகுந்த இரண்டு சகோதரிகள் ஒருவேளை உணவில்லாமல் வாடி வதங்கிய பரிதாபக் காக்ஷியையும் அவன் கண்கள் கண்டன! அவனால் அதற்கு மேலும் பொறுக்க முடியவில்லை! எற்கனவே ஏழைகளிடம் அவனுக்கிருந்த பேரன்பு, இப்போது பெருவெள்ளமாகிப் பெருக்கெடுத்துப் பாயத் தொடங்கியது. எந்த விதத்

திலும், தன்னுல் இயன்ற வரையில் கஷ்டப்படும் ஜனங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று தீர்மானித்தான்! அவர்கள் பசியால் சாகாதபடி பாதுகாக்கக் கங்கணம் கட்டிக் கொண்டான்.

அன்று முதல் அந்த நாணயமான மனிதன் "பக்கா ரௌடி" யாக மாறினன். பணக்காரர்களைக் கொள்ளை யடித்து, ஏழைகளுக்கு அந்தப் பணத்தை உதவுவதென்று பிரதிக்ஞை செய்து கொண்டான். அவன் ஒரு கையில் தன் மரணத்தையும், மற்ருெரு கையில் ரிவால்வரையும் பிடித்துக்கொண்டு தீவிரமாகத் தன் பிரதிக்ஞையை நிறைவேற்றி வந்தான்!

பணம் எந்த இடத்திலிருந்து எந்த இடத்திற்கு அனுப்பப் பட்டாலும் சரி, அந்த இடத்தில் மறு நிமிடம் அவன் இருப்பான். அடுத்த நிமிடம் பணம் அவன் கைக்கு வந்துவிடும்! ஆனல் மரணம் யாரையும் விடுவதில்லை யல்லவா?

டாக்டர் கண்ணபிரான், பக்கா ரௌடியின் சொந்த மகளான "ராதா"வைக் காதலித்து வந்தார்! ஆனல் டாக்டர் கண்ணபிரான் ஒருவர்தான் அவனுடைய விரோதியாய் இருந்தார்! ஒருநாள் இருள் நிறைந்த இரவில் "பக்கா ரௌடி" டாக்டர் கண்னபிரான் வீட்டினுள் நுழைந்து, டாக்டரின் பணப்பெட்டியில் தன் இரும்புக்கையைச் செலுத்த முயலுகின்ருன். ஆனல் அவனுடைய ஒரே மகளான ராதா தன் விரோதியான கண்ணனின் ஆலிங்கனத்திலிருப்பதைக் கண்டு ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து நின்றுவிடுகிருன். டாக்டர் கண்ணன், திருடன் ஒருவன் தன் வீட்டிலிருப்பதைக் கண்டு அவனைத் தன் ரிவால்வரால் சுடுகிருர். பக்கா ரௌடியின் கையில் குண்டு பாய்கிறது; ஆயினும் அவன் ஓர் ஜன்னல்வழியாகத் தப்பி ஓடி விடுகிருன்.

பாவம்! ராதா! மனசஞ்சலத்தோடு வீட்டிற்கு வருகிருள். அங்கு அவளது தகப்பனர் குண்டுக் காயம் பட்டிருப்பதைக் காண்கிருள். தன் தந்தை தான் "பக்கா ரௌடி" என்ற உண்மை, மின்னலைவிட வேகமாக அவள் மனதில் தோன்றியது. பாவம்! அவள் அப்படியே ஸ்தம்பித்து உணர்வற்று நின்று விடுகிருள்!

பக்கா ரௌடி, தன் ஒரே அருமை மகளான ராதாவிடம்தான் செய்த எல்லாவற்றையும் பகிரங்கமாகக் கூறி, பட்டினியால் மடியும் மக்களைக் காப்பாற்றுவதற்காகத் தான் சேர்த்த ஏராளமான திரவியம் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்தைக் காட்டக்கூடிய ஒரு படத்தை அவளிடம் கொடுக்கிருன்.

ஆனால் பக்கா ரௌடியின் ஆசை நாயகியாய் இருந்த கமலா அந்த இரகசியத்தை மறைந்து நின்று கேட்டு அறிகிறாள். ராதா டாக்டரைக் கூப்பிடபோன சமயத்தில், கமலா, தன் நண்பனும் ஓர் மதுபான ஓட்டலின் சொந்தக்காரனுமான நடேஸ் என்பவனை டெலிபோன் மூலமாக அழைத்து அந்தப் படத்தைக் கைப்பற்ற முயற்சி செய்கிறாள்.

டாக்டர் கண்ணன் ராதாவின் தகப்பனாரின் இரகசியத்தைத் தெரிந்துகொண்டு, அவள் வீட்டிற்கு வந்து பக்கா ரௌடியின் காயத்திற்கு சிகிச்சை செய்கிறார். மற்றக் காரியங்களை கவனிப்பதற்காக ராதா டாக்டருடன் வெளியில் போன சமயத்தில் நடேஸ் அங்குவந்து அந்த இரகசியப் படத்தை தன்னிடம் கொடுக்கும்படி பக்கா ரௌடியை கேட்கிறான். ஆனால் அவன் கொடுக்க மறுக்கவே, நடேஸ் அவனைச் சுடுகிறான். தன் மகள் ராதா, தான் செய்து வந்த ஏழைகளைக் காக்கும் காரியத்தைத் தொடர்ந்து செய்து வருவாள் என்னும் மனச்சமாதானத்துடன் பக்கா ரௌடி இறக்கிறான்.

ராதா தன் தந்தை தன்னிடம் கொடுத்த இரகசியப் படத்தை தன் காதலனான கண்ணனிடம் கொடுக்கிறாள். கமலாவும் நடேசும் சேர்ந்து அந்தப் படத்தை அவர்களிடமிருந்து கைப்பற்ற முயற்சிக்கிறார்கள். இப்போது நடேஸ் தன்னை "பக்கா ரௌடி" என்று கூறிக்கொண்டு எல்லோரையும் பயமுறுத்திக் கொள்ளையடிக்கிறான்.

கடைசியில் அவன் கண்ணனிடம் இருந்து அந்தப் படத்தைக் கைப்பற்றிக்கொண்டு, கமலாவுடன் திரவியமிருக்கும் தீவுக்குப் போகிறான். கண்ணனும், ராதாவும், அவர்களைப் பின் தொடருகிறார்கள்.

நடேசன் பொக்கிஷத்தைக் கண்டு எடுத்துப்போக முயலும் சமயத்தில் கண்ணன் அங்கு தோன்றுகிறான்! இருவருக்கும் மிகப் பயங்கரமான சண்டை நடக்கிறது. கடைசியில் கண்ணன் காயம் பட்டு விழுகிறான்.

**கண்ணன் கதி என்ன?**

**பொக்கிஷத்தை யார் கைப்பற்றுகிறார்கள்?**

**கண்ணனை யார் காப்பாற்றுகிறார்கள்?**

**இவற்றை திரையில் பாருங்கள்.**

உ

# பக்கா ரௌடி

## பாட்டுகள்

இராகம்: விந்து பைரவி. தாளம் ஆதி.

ராதா:— ஆஹா! ஆனந்தமான உல்லாச காலம்!
சுகமாக இளங்குயில் கூவுதே ! (ஆஹா)

தோகையரு

இயற்கை அன்னை மனங்களித்து இங்களிக்கும் காட்சி
இக லோகத்தில் ஈடில்லாத தனிப் பெரும் மாட்சி!

பாட்டெடுப்பு

கொஞ்சிக் கொஞ்சிக் கிளிகள் பேசும்
குளிமை என்ன கூறுவேன்!
கெஞ்சிக் கெஞ்சி இங்கழைக்கும்
மலர்கள் இனிமையாகவே! (ஆஹா)

இராகம்: கானடா. தாளம் ஆதி.

கண்ணு:— காதலரிருவர் கருத்தொருமித்தே
ஆதரவுற்ற இன்பத்திற்கிணையாய்
ஆமோ பாரினில் வேறெது தானும் ?
ஆமோ எந்தன் அருள் விழிமானே !

ராதா:— உண்மையே உறைத்தனை என்னுயிர்க்கண்ணு!
நன் பகல்தனிலும் நடுவிரவதிலும்
பின்பகலதிலும் முன்னிரவதிலும்
உன்னையே நினையா ஒருக்ஷணமுண்டோ ?

கண்ணு:— ஈருடலோருயிர் என்றுளமகிழ்ந்தே
பேர்பெறுமின்பப் பொக்கிஷம் பெற்றால்
சரலோக, சாமீப, சாரூப, சாயுஜியம்
ஆகிய பதவியும் அதற்கிணையாமோ?

ராதா:— ஒட்டைக் குடிசையில் ஒண்டிநாம் வாழினும்
ஒருபோதுணவு மின்றியே மாயினும்
வாட்டிடும் வறுமையால் ஆடையிலதெனினும்
கூட்டிய காதல் நனிசுவை தருமே!

---

இராகம்: ஸ்ரீரஞ்சனி. தாளம் ஆதி.

பல்லவி

கண்ணு:—சித்தங் கவருந் தையலே!—பெண்மணியே (சித்)

அனுபல்லவி

பத்தரை மாற்று பசும்பொன் மேனி
இத்தரை மீதிலே எழில்மிகு ராணி (சித்)

சரணம்

முத்தருங் காணில் சித்தங் குலைவார்
பித்தமுங் கொண்டு நித்தம் அலைவார்
உத்தமியாளென் உயிரினுமினியாள்
அத்திரு மோகினி அவதாரமனையாள் (சித்)

---

இராகம்: மோகன கல்யாணி. தாளம் ஆதி.

பல்லவி

ராதா:— ஆடவர் அறியார்—அறிவையர் மனதை
சாடியே ஓடுவார்—நாடிடும் பொழுதே!

அனுபல்லவி

கருத்திற்கிசைந்த எந்தன் கண்ணனைப் பிரிந்தே
ஒருக்ஷணமாயினும், தனித்திருக்கலாகுமோ? (ஆட)

சரணம்

தொழில்முறை தன்னால் தோழரையரை விட்டு
பொழுதைப் போக்கவென்றால் போகுது மனம் விட்டு
க்ஷணப்பொழுது மெந்தன் கண்ணனைப் பிரியவிட்டு
தனித்திருக்க எந்தன் மனமிசையாது கெட்டு (ஆட)

---

இராகம்: மாண்டு. தாளம் ஆதி.

ரங்கன் & சத்தார்:—

கிழக்குத்திக்கில் கௌளி சொன்னால்
கிழவியும் பாட்டியாவாளே!

மேற்குத்திக்கில் கௌளி சொன்னால்
மெலிஞ்சவன் எலும்பன் ஆவானே!
வடக்குத்திக்கில் கௌளி சொன்னால்
வந்தவன் திரும்பிப் போவானே!
தெற்கில் கௌளி சொல்லச் சொல்ல
தெரிஞ்சதும் மறந்து போகுமே!
முன்னாலே போகிற குதிரைக்குப் பின்னாலே வாலு
குதிரைக்குப் பின்னாலே வாலு

---

இராகம்: இந்துஸ்தானி காபி. தாளம் ஏகம்.

கோக்கோ:—

மாடியில் போய் நீ ஒழிக்கிறாய் ஏன்
வாடி என் மாமயிலே! ஆ! ஆ!
வாடி என் மாமயிலே!
ஏழையென்று எண்ணாதேயடி பெண்ணே!
இன்பங் கொடுப்பேன் நானே! ஆ! ஆ! :
இன்பங் கொடுப்பேன் நானே!
மானே! தேனே! உன்னைக்கண்டு
மையலானன்,
வாடி என் மாமயிலே! ஆ! ஆ!
வாடி என் மாமயிலே!

---

இராகம்: இஸ்துஸ்தானி காபி. தாளம் ஆதி.

கமலா:—

பாதுரினில் மதுரபானம் ஈதாமே!
கோரிய காயம் ஜெயமாமே! (பா)
தேகமெல்லாம் பரவசமாய் சுகம் கொடுக்குமே!
வேகமாக ஸொர்க்க போகமுங் கிடைக்குமே!
மோசமில்லை, நாசமில்லை, க்ஷேமந்தானெல்லாம்
பாசங்கொண்ட மாந்தர் யாவருமருந்தலாம் (பா)

**இராகம்: பிம்ப்ளாஸ்.** **தாளம் ஆதி.**

கமலா:—மேலே மேலே சகல சுகமும்
தேடி வருது காண்! (மேலே)
நாமே பாக்ய ஜென்மம்
பெற்றே களிப்போமே காண்!
பெற்றே களிப்போமே காண்! (மேலே)

தோஹையரு.

பூலோகத்தில் நம்மைப்போல சுகபோக சாலிகள்
உண்டோ வேறே?
ஆஹா என்ன ஆனந்தமான உல்லாஸம்
அனுபவிப்போம் நேரே!

பாட்டெடுப்பு

பீரே இனி நம் தெய்வம்!
பிராந்தியிலே குளிப்போம்!
நேரே ஸொர்க்க போகம்!
நமக்கினி நல்ல யோகம்! (மேலே)

---

**இராகம்: இந்துஸ்தானி காபி.** **தாளம் ஆதி.**

கண்ணு:—காதலினாலே இகபரசுகம் பெற
இனி நமக்கேதும் தடையது கிடையாது

ராதா:— ஒருயிர் ஈருடலே நமக்கினி
ஒருக்ஷணமாயினும் பிரிவேது?
பாரினிலே சுகம் பாக்கி வேறேது?

கண்ணு:—இருபெரும் அமிர்த ப்ரவாகங்கள்
ஓரிடம் ஓடின சங்கமே ஆக! (காத)

ராதா:— சூர்யனைக் கண்ட பனியது போலவே
தீர்ந்ததுவே நம் துயரமெல்லாமே!
கோரிய இன்பக்காலம் வந்ததுவே

கண்ணு:—சந்ததமுமே சௌபாக்கியமே
பொங்கியே வந்திடும் இங்கிதமாக (காத)

சுபம்! சுபம்!! சுபம்!!!

# PUCCA ROWDY

## SYNOPSIS.

There was a havoc in People, that Pucca Rowdy may come at any moment and rob them.

He was Slaughtering people like animals, plundering towns, smouldering villages and setting fire to the houses.

There was panic throughout, even in dreams. But nobody knew that before Pucca Rowdy was an honest and straight forward man. In his body he had a bleeding heart for the poor and orphans.

He saw the poor spilling blood for a piece of their daily bread. He saw the ragged urchins eating leaves and mud through want of food.

He saw two beloved sisters fighting for bread, then he couldn't bear it, he resolved to serve them to give them their daily bread.

From that day he changed himself into Pucca Rowdy, He vowed to plunder the rich and help the poor. He kept death in one hand, in other a pistol. When-ever he scented money he would be there in a minute and capture it. But death never flatters anybody. Doctor Kanna was in love with his own daughter Radha, and Dr. Kanna was his only enemy.

One deadly night Pucca Rowdy sneaks in Doctor's apartment to try his nimble hands on the cash box. But to his greatest astonishment he sees his only daughter Radha in the arms of his enemy Dr. Kanna. Dr. Kanna seeing a robber fires a bullet at him. Pucca Rowdy is wounded but escapes from the window.

Poor Radha comes home and sees her father is wounded. More rapid than the lightining truth flashes on her.

Her father is the same Pucca Rowdy. She stands thunderstruck. Pucca Rowdy confesses everything to his only beloved child Radha, and gives her map of the hidden treasure which he had collected for the services of the poor who were starving.

But Kamala the kept of Pucca Rowdy listens everything. Radha goes to call the Doctor, meanwhile, Kamla phones to Natesh the Owner of a cafe to her help to capture the map. Dr. Kanna learns the truth comes with Radha and dresses up the wounds of Pucca Rowdy. Radha goes to reach the Dr. Meanwhile Natesh comes there and asks Pucca Rowdy the map of the treasrue. Natesh in anger shoots Pucca Rowdy. He dies with content that his beloved daughter will cary out his holy mission, Radha hands over the map to her most beloved Kanna. Natesh and Kamla both try to get the map from Kanna. Natesh now calls himself Pucca Rowdy, robbing and harrassing everybody.

He gets map from Kanna and advances towards the Island where the treasure is. Kanna and Radha follow him. Natesh captures Treasure. Meanwhile Kanna enters. They both enter a dreadful duel. Kanna falls wounded

What happens to Kanna? Who gets the Treasure ?

Who saves Kanna? See it on the Screen !

*DON'T FAIL*

*TO SEE*

# KUL-DEEPAK

THE BEST STUNT

HINDI FILM

FULL OF THRILLS-STUNTS AND MAGIC

---

COMING

THE BIGGEST SOCIAL HIT

OF THE YEAR

IN TAMIL

?

WATCH ANNOUNCEMENT.

*Coming Shortly!*

# BOMBAY TALKIES'

LIMITED

LATEST

# Jeevan Prabhat

*FEATURING:*

## D E V I K A R A N I

READY FOR BOOKINGS.

1. Prem Kahani
2. Izzat
3. Janma Bhoomi
4. Jivan Naiya
5. 'Mother' and
   'Always Tell Your Wife'
6. Jawani-ki-Hawa

**Bombay Talkies' Productions.**